
## சரியான உவமைத்தொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

### கதை 1



சுந்தரவனம் எனும் சிற்றூர் இயற்கை அழகு மிகுந்த ஓர் ஊராகும். இங்கு வாழும் மக்கள் உழைப்பில் சிறந்து விளங்கினர். விவசாயமே அவர்களின் உயிர் என்பதால் நெல் பயிரிடுதல், காய்கறித்தோட்டம் போடுதல் ஆகிய தொழிலைச் செய்தனர். இவர்களின் கடின உழைப்பால் ஊரே பசுமையாகக் காட்சியளித்தது. திடீரென ஒரு நாள் மழையும் புயலும் அவ்வூரைத் தாக்கியது. நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின. கால்நடைகளைக் காப்பாற்ற முடியாமல் மக்கள் தவித்தனர். ________ ஊர் மக்கள் சோகத்தில் துடித்தனர். தங்கள் ஊர் பசுமையை இழந்திடுமோ என்று அச்சத்தில் வாடினர்.

### கதை 2



வழக்கம் போல அன்றும் உறங்கச் செல்லும்முன் தாத்தாவிடம் கதை கேட்க அமர்ந்தோம். ஆனால், அன்றைய தினம் அக்கா தனது வீட்டுப் பாடங்களைப் பற்றிய விளக்கங்களைத் தாத்தாவிடம் கேட்க ஆரம்பித்துவிட்டாள். ஆசிரியர் கொடுத்த திரட்டேடு தயாரிக்கும் வேலைகளைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு விவரங்களைச் சேகரித்தாள்.

அக்காவின் கேள்விகள் அனைத்திற்கும் தாத்தா தன்னம்பிக்கையுடன் பதில் கூறினார். தாத்தாவிற்கு நாளிதழ் வாசிப்பது பிடித்தமான ஒன்று. அன்றாடச் செய்திகளையும் தகவல் ஊடகங்களின் மூலம் அறிந்துகொள்வார். நாம் அனைவரும் வெளியுலகம் அறியாமல் ________ வாழக் கூடாது என்பார். நம்மைச் சுற்றிலும் வெளியிலும் நடக்கும் நடப்புச் செய்திகளை அறிவதில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்றார்.

### கதை 3




கல்வியிலும் இணைப்பாட நடவடிக்கைகளிலும் மிகவும் துடிப்புடன் செயல்படுபவன் நிறைமதியன். எல்லாப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெறுவது அவன் நற்பெயரை மேலோங்கச் செய்தது. மேலும், மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் கொண்டவன். பள்ளியையும் மாநிலத்தையும் பிரதிநிதித்துப் பல போட்டிகளில் வாகை சூடுவது வழக்கமாகிப் போனது. ________ நிறைமதியனின் திறமையை அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

LIVEWORKSHEETS